
# அம்மா என்றொரு அற்புதம்

# What a Wonderful Thing is a Mother



தில்லை மாநகர் சிற்றம்பலவனார்க்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பே சிவமாய் அமர்ந்தாரே



# Happy Memories

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்னையே உன் அன்பின் கருணையை

அளவிட்டுச்சொல்லும் வன்மை எனக்கில்லை

ஈரைந்து மாதம் என்னை நீ சுமந்தாய்

எத்தனை துன்பங்கள் இருந்தாலும் மகிழ்ந்தாய்

பிரசவ காலத்தில் நீ பெற்ற துன்பங்கள்

பிள்ளை முகம் கண்டதும் பேருவகை எண்ணங்கள்

மலர் முத்தம் அதனிடையே மாதா

உன் தாய்மைமொழி

வியத்தகு உன்தியாக வேள்விக்கோர் கைமாறு

வேறென்ன நான் செய்வேன்!

வணங்கினேன்! வணங்கினேன்!

வணங்கினேன் அன்னையே!

**மகன் : ரமணா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமதி. ஜெயராணி அருள்ஜோதிசந்திரன்

| | |
|---|---|
| இகலோகம் | சிவயோகம் |
| 25.11.1957 | 12.07.2012 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

நிரைகழல் அரவம் சிலம்பொலியலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பெருங் கனமணி வரன்றிக்
குரைகடலோத நித்திலங் கொழிக்கும்
கோணமாமலை யமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

வேண்டத் தக்கதறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன்றுண்டென்னில்
அதுவும் உந்தன் விருப்பன்றே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

# திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் - எழில் நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் - மழுமானும்
அசைந்ததோடும் சிரமணி மாலையும் - முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய – குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற – முனிவோனே
உகந்த பாசக் கயிறோடு தூதுவர் - நலியாதே
அசைந்த போதென் துயர்கெட மாமயில் - வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

# வாழ்த்து

வாழ்க வாழ்கவே என் சங்கரன் திருவடி
வாழ்க வாழ்கவே மெய்கண்டான் திருப்பதம்
வாழ்க வாழ்கவே செஞ்சடையான் சேவடி
வாழ்க வாழ்கவே சிவயோக சித்தி தந்த குருமணியின்
- திருப்பாதமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி. ஜெயராணி அருள்ஜோதிச்சந்திரன்

## திதி வெண்பா

ஆண்டது நந்தனத்தில் ஆனித் திங்களதில்
அபரநவமி சேர் வியாழ நன்நாளதனில் - மீண்டனள்
சிவயோக சித்தி நிலை: அரு(உ)ள் ஒளி மதியாம்
ஜெயராணி ரமணத் தாய்.

# அகவல்

ஆலோலம் பாடுகடல் அடியவர்கள் கூடுமலை
காலோரம் வந்துபல கவிதை தரு வங்க அலை
மாலோடு இந்திரனும் வந்திறங்கு தென்கையிலை
கோனோடு கூடி மகிழ் கோலமயில் மாதுமையின்
தேரோடும் தெருவெல்லாம் பரியோடும் பரம்பரையில்
முதலியார் குடியினிலே முத்தெனத் தோன்றியவள்
நீலாதாட்சி அம்மாள் எனும் நிலவழகு கொண்ட மகள்
அலைபாடு தலைநகராம் கொழும்பினிலே அச்சக
பெரு வணிக மரபினிலே அருணாச்சலமெனும் ஆடவரை
மணம் புரிந்து வத்தளை வதிவிடமாய் வாழ்ந்திருந்து
பெற்றெடுத்த ஐவரில் நடு மகளாய் வந்துதித்தாள்
ஜெயராணி எனும் அனங்கு
தலைமகளாய் ஜெயதேவி தவப்புதல்வன் ஜெயராஜா
தங்கையவள் யோகசுந்தரி விக்னராஜா தம்பியென
ஐந்தளிர்களாடிவரும் நந்தவன வாழ்க்கையிலே
தாய்மாமன் அரவணைப்பில் திருமலையில் சிலகாலம்
போய் வாழ்ந்த நாட்களெல்லாம் பெருமளவு பேசிடுவாள்
தாயாரின் உடன் பிறப்பார் தந்தையார் உடன் பிறப்பார்
சேயோடு சேர்ந்துவிளையாடிவரு காலங்களை
ஓயாமல் உரைத்திடுவாள் ஒருவரையுங்காயாத கனிந்த மனம்
தங்கையின் புதல்விகளை தன் புதல்வி என மகிழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கேயும் போனாலும் ஏற்றமுடன் எடுத்துரைப்பாள்
மாங்கையின் வாழ்க்கையிலும் மணநாள் வருமென்று
அங்கேயோர் காண்டம் நூல் அடிகளை அடித்துரைப்பாள்
சிவனின் பேர் முன்னதாயும் அரசன்பேர் பின்னதாயும்
வந்தமைந்த மணவாளன் அருள்ஜோதிச் சந்திரனும்
திருக்கோணமலை மைந்தன் குலோத்துங்க வேளாளன்
சந்திரசேகரம் பிள்ளையட்கும் ஞானாம்பிகை அன்னையட்கும்
வந்துதித்த புத்திரருள் பின்னுதித்த புத்திரனாம்
அன்னவளை மணங்கொண்டு லண்டன்மாநகர் வந்து பெண்ணவளும்
தாயாளாள் பெற்றெடுத்தாள் மகவொன்று
ரமணா என்று பேரிட்டு சுகமாய் வாழ்ந்த காலங்கள்
ரணமாய் போனதேனின்று வெறும் கனவாய் போன வாழ்வின்று
சாகப் பிறந்த சிருஷ்டிகள் நாம் சாகாதிருத்தல் சாத்தியமா?
போகப்போற பயணத்தை பொறுத்துப்போதல் சாத்தியமா?
பொதுவாய்போகும் இயற்கையின் போக்கு என்றும் பொய்த்திடுமா?
மனிதா உனக்குள் மூழ்கிப்பார் மறைபொருளெல்லாம் மெய்ப்படுமே.

# ரமண கீதம்

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக் கேட்ட தாய்.

ஈன்ற தாய் எனக்கின்றில்லை நாளையெனைச்
சான்றோன் எனக் கேட்க வருவளோ - இனியார் தமக்கு
தோன்றும் பேரவலம் துடைத்து நின்று
சான்றோ னெனச் சார்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் வணக்கம்

இராகம் : கல்யாணி தாளம் : கண்டசாபு

ஐங்கார ஹ்ரீங்கார பீஜாட்ஷரார்த்த
ஸ்ரீங்கார கூடார்த்த ப்ரணவ ப்ரதாயகா
ஓங்கார மந்ரார்த்த மூர்த்தே கணேஷா
நமோ நம ஸ்ரீகுருபாத பங்கஜம்

## திருக்கோணேசர் பாடல்

இராகம் : காபி தாளம் : ஆதி

மரகதமலை போன்ற தென் கயிலை மாமலையில்
நர்த்தனம் ஆடும் நர்த்தக மணியே
மரகதக்கால் சிலம்பொலி கேட்க திருமலை இறைவா
வந்தேன் உன் தாள் இணைக்கு
வருக வருக என்று வரவேற்று வரம் தந்த வரதநாயகா
வரருஜி ருஜித்தோர் இகருஜி அறியார் சிவனே சிவனே

இராகம் - சகானா

நீராம்பல் பூமணத்தை நீர்வாழ் நீரினம் நுகர்வதில்லை
நீரலையில் கலந்துவரும் சிலம்பொலி நாதத்தை
மூடர்கள் மூடதையால் உணர்வாரில்லை
மூர்த்தி ஸ்தலம் தீர்த்தம் என்ற முப்பெரும் ஸ்தல
பெருமையை உணர்ந்தோர்
மூப்பும் பிணியும் அகற்றி முக்தி இன்பம் அடைவார்
ஐயம் இல்லை என் ஐயனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : சிந்து பைரவி

உளக்கண் திறக்கும் திறவுகோல் இங்குதான்
உண்டுவேறு எங்கும் தேடவேண்டாம்
உச்சிமலையில் தவக்குகையில் உள்ளடக்கி உள்நோக்கி
இருந்தால் அகக்கண் திறக்கும் உண்மை
கோரக்க முனிவர் செய்த தவப்பயனால்
திருமலையில் வந்தமர்ந்த திருமலை தேவா
கொடுமைகளை மாளவைத்து அருள் புரியும்
அருட்பெரும் கருணைக் கடலே

இராகம் : சிந்து பைரவி

வேதனையும் சோதனையும் நிறைந்த உயிரோட்டம்
நிற்கும் வேளையில் உயிர்ப்பிக்கும் இரட்சகனே
வத்சலப்பிரியனே உன் திருத்தாள் மகிமையை
எவ்வாறு எடுத்துரைப்பேன் சின்மயானந்தனே
தெட்சண கயிலைமலை அமிர்தா உன் பொற்பாதத்தை
பத்ர புஷ்பம் தூவிபூஜிக்க அருள்புரிவாய்

இராகம் : மத்யமாவதி

மிலேச்சரால் அழித்தும் அழியாமல் நின்று செங்கதிர்
வீசிநிற்கும் செஞ்சடையவனே
மானசீக லிங்கத்தை மனத்தால் பூஜை செய்து மௌனமாய்
இருக்கும் மௌனிகளால் அன்றிஉன்னை வேறா ரறிவார்
தங்கத் தமிழில் நொந்து நொந்து உருகி உன்
திருப்புகழ் பாடி வாழும் நல்லடியாரை
தங்கப் பாத மலரில் வைத்து அணைத்திடுவாய்
சோபித லிங்க அருள்மணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்

இராகம் : சம்நந்தனப்பிரியா          தாளம் : ஆதி

திருமலையில் அமர்ந்திருக்கும் என் அம்மை காளிகையே உன்
திருவடியில் சார்ந்து நிற்கும் அடியாரைக் காப்பவளே
கலிகாலக் கொடுமைகளைத் தீர்த்தருளும் காமாட்சி
கலியுணர்வைத் தீர்த்தருள்வாய் என் அம்மை மீனாட்சி
(திருமலையில்)

அடித்தாலும் வதைத்தாலும் உன் காலடியை விடவே மாட்டேன்
அடிவைத்து அடியளந்து வருங்கால் கருணைக் கண்
விழித்தருள்வாய்
(திருமலையில்)

கௌரி மனோகரியே கௌரி காப்பு எடுப்பவரைக்
கௌரவமாய் வாழ வைத்து இரட்சிக்கும் இரட்சகியே
(திருமலையில்)

நீயே கதியென்றெண்ணி தஞ்சம் புகுந்திருப்பவரை
நாயகியே காத்தருள்வாய் ஜோதிர்மணி அம்பிகையே
(திருமலையில்)

நீலக்கடல் பார்த்த வண்ணம் வீற்றிருக்கும் மலையாளே
நீலவர்ண மேனியாளின் அழகல்லோ பேரழகு
(திருமலையில்)

என்வினை என்னைச் சூழ்ந்து நெஞ்சுருகி நிற்கும் வேளை
உன்திருவடியே கதியென்றெண்ணிச் சிரம்தாழ்த்தி நிற்பேனம்மா
(திருமலையில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்கொடியில பூ மலர்ந்தால் தேன்வண்டு தானே வருமே
பூர்ணிமையாள் நெஞ்சில் மலர்ந்தால் சங்கரனும்
(திருமலையில்)

இடர்களைத் துடைத்தெறிந்து இன்ப வாழ்வைத் தரும்
இன்ப வாஹினியே
பிடிநடையாள் உலகளாவிச் சென்று பரிபாலிக்கும் பாலகியே
(திருமலையில்)

தென் கயிலை நடுநகரில் கோவில் கொண்டமர்ந்திருக்கும்
என் அம்மை பத்திரகாளி
தம்பட்டம் அடிப்பவரின் கொட்டமடக்கும் சூலினியே
(திருமலையில்)

பேரும் வேண்டாம் புகழும் வேண்டாம் மனம் நிறைந்த
வாழ்வே போதும்
பேரொளியில் வாழ்வோரெல்லாம் அல்லல் இன்றிவாழ்பவரே
(திருமலையில்)

ஆரணியின் அருள் ஒளியில் வாழ்ந்து வரும் அடியவரை
அற்புதமாய்க் காத்தருளும் அருள் நுட்பம் கண்டேனம்மா
(திருமலையில்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம்

இராகம் : ஹரிந்தோளம் தாளம் : ஆதி

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவருமாவர்
சிவ சிவ என்னச் சிவகதிதானே.

# பஞ்சாட்சர ஜெயம்

சிவாயநம ஓம் சிவாயநம ஓம்
சிவாயநம ஓம் சிவாயநம ஓம்
சிவ சிவ சிவ சிவ சிவாயநம ஓம்
சிவ சிவ சிவ சிவ சிவாயநம ஓம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய



# திருவாசகம்

திருப்பெருந்துறையில் அருளிய

## சிவபுராணம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

## கலிவெண்பா

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுது என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடிப்போற்றி

ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை

முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லரசு ராகி முனிவராயத் தேவராயச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்க மளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பாய் யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பில்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணொர்களேத்த
மறைந்திருந்தாயெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் மொன்பதும் வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நல்ந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தாயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவோம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனே ஓ என்றென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்



## காப்பு நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்
நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்
கதித்தோங்கும் நிஷ்டையுங் கைகூடும்
நிமலரருள் கந்த சஷ்டி கவசந்தனை

**குறள் வெண்பா**

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

**நூல்**

நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணியாட
மையல் நடனஞ் செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசவன் மருக வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சர'ண பவனார் சடுதியில் வருக
ர'ண பவச ரரரர ரரர
ரி'ண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சர'ண வீரா நமோநம
நிபவ சர'ண நிறநிற நிறென
வசர 'ணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியும் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நண்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பழகுடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செகண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுண்டிரு வடியை உறுதியென் றென்னும்
என்றனை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேலிரண்டும் கண்ணினை காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனை பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறியிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் யெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்க நோக்க நொடியி நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழக்கட முனியும்
கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சணமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட ணங்கம் கதறிடக் கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி யுருட்டு கைகால் முறியக்
கட்டுக் கட்டுக் கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெகுண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைஷயங் குன்மம் சொக்கச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சர'ண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருக அமரா பதியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன், ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றி யிலணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன் பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரஷி அன்னமும சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைகுற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவ நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடனே அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள்ள என்றன துள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சர'ண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாத நினைவுகள்

ஜயனி! என் ஜயம் நீ — என்
பயம் நீ என் பலம் நீ — என்
வயம் நீ உன் வயம் நான் என
பவனி வந்தோம் அயனின் அரும்
படைப்பில் நாம் பயணி யானோம்.
மயனின் மாளிகையில் சயனம் செய்தோம்.
தயை நீ தந்தொரு நான் ஜனனி யானாய்
ஜயனி எம்மகனின் தாயு மானாய்.
பயணி போல் பாதியில் பிரிந்து சென்றோம்.
பயணத்தை நாமிருவர் தொடருகின்றோம்.

ஜெயராணி என்வாழ்வின் ஜெயமே தான் நீ
அயராய் நீ உழைத்ததனால் அயர்ந்து போனாய்
பயிரான் நீ வளர்த்தபிள்ளை பயனை எல்லாம்
பாருக்கே பாத்திகட்டிப் பாய விட்டாய்
உயிராய் நீ உள்ளதை நாம் உணர்ந்து கொண்டோம்
உயராத உயரம் நீ உயர்ந்து விட்டாய்
துயராலே நம்மனதை உடைத்து விட்டாய்
தூயவுன் அன்பைத்தான் மீதம் விட்டாய்.
மாயவாழ் விதுவென்று மரணித் தாயோ?
மரணமே வாழ்விற்கோர் மாயந் தானோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EVER GREEN MEMORIES

The more I experience life
The more I realize
That the mother as great as you
Is really very rare.

இன்னும் நான் வாழ்வில் அனுபவப் படப்பட
இன்னும் நான் உணர்ந்து கொள்வதெல்லாம்
அன்னையே! உன்னைவிடப் பெரிதானது
உலகில் மிகவும் அரிதாகவே உள்ளது.

அருவமாய் உருவங் கொண்டாய்
அன்னையின் உயிரும் கொண்டாய்
அக்கினி உருவங் கொண்டு
அன்னவள் உடலுங் கொண்டாய்
தருமணி கடலுமானாய்
தாயவள் நீறுங் கொண்டாய்
பெருவெளி அருவமாக பின்னவள்
நிறைந்து நின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I knew my mother for only 14 years and in that time she has left me with great memories and no one can take them away from me. She has watched me grow since I was a baby. She has been there every step of the way and it's not easy for me to lose her. But all the good things in life must come to an end and we must all accept that. You may have heard the saying "The good die young" as you can see that is exactly what's happened. Before I want to finish this speech I want to leave you with a Jewish proverb "God could not be everywhere so he created mothers."

எனது அம்மாவுடன் பதினான்குவருடம் இருந்தேன் சிறந்த நிறைந்த நினைவுகளை என்னிடம் விட்டுச்சென்றுள்ளார். அவற்றை எவரும் என்னிடம் இருந்து எடுத்துச் சென்றுவிட முடியாது. சிறு குழந்தையாக இருந்து நான் வளர்ந்ததை அவர் கவனித்துள்ளார். எனது வாழ்க்கையின் ஒவ்வொரு அடியிலும் அவர் இருந்துள்ளார். அவரை இழப்பது இலகுவான காரியமல்ல. வாழ்க்கையில் எல்லா இனிமையான விடயங்களும் ஒரு முடிவுக்கு வந்தே ஆகவேண்டும். அதை நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும். 'நல்லவர்கள் சீக்கிரம் இறக்கிறார்கள்' என்ற வசனத்தை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அது தான் உண்மையில் நிகழ்ந்துள்ளது என்பதை அறிவீர்கள். இந்த சிறு உரையை முடிக்குமுன் "கடவுள் எங்கேயும் எந்நேரமும் இருக்கமுடியாது. அதனால் தான் தாயை இறைவன் படைத்தான் இந்த யூதப் பழமொழியை உங்களிடம் விட்டுச்செல்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயோடறுசுவை போம் தந்தையோடு கல்வி போம்
சேயோடு யாம் பெற்ற செல்வம் போம் மாய வாழ்வு
உற்றாருடன் போம் உடன்பிறப்பால் தோள்வலி போம்
பொற்றால்லியோடு எவையும் போம்.

With the passing away of the mother,
the deliciousness in the food will go;
With the passing away of the father,
the wisdom of the world will go;
With the passing away of the son,
the wealth we received will go;
With the passing away of the relative,
the joy of the illusive life will go;
With the passing away of the sibling,
the strength to shoulder an obstacle will go;
With the passing away of the wife,
all and everything will go.

**From loving husband Jothie**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரில்லா பொருளொன்று "ஜெயராணி" எனப் பெயர் கொண்டு
சிறப்பாக வாழ்ந்திங்கு
உருவமில்லா அந்தப் பொருள் ஒரு உடலோடு வந்திங்கு
உறவுகளோடு வாழுந்து முடித்து இப்போ உடலை மட்டும் கண்காண
விட்டு விட்டுக் கண்காணா இடமெங்கோ சென்றுவிட்டதா?
நேற்றிருந்தார் இன்றில்லை நாளை நம்கதியும் அதுவல்லவா?
எல்லா மனிதர்களும், எல்லாக் காலத்திலும், எல்லாச்
சந்தர்ப்பங்களிலும் தங்கள் தங்கள் மொழிகளில் தங்களுக்குத்
தாங்களே இட்டுக் கொள்ளும் பெயர் தான் "நான்" அந்தப் பெயரை
அவர்கள் சொல்ல முடியாத நிலைதான் மரணமா?
என் கணவர், என் மகன், என் அக்கா, என் உறவினர்கள்
என்றெல்லாம் அவர் எம்மோடு இப்போ உறவாடமுடியாமைக்கும்,
அவரோடு நாமிங்கு தொடர்வு கொள்ள முடியாமைக்கும் என்முள்
வந்துபோகும் மூச்சு அவருள் வந்துபோகவில்லை என்பதா?
மரணத்தின் போது உடலை விட்டு உயிர் பிரிகின்றதா? அல்லது
உயிரை விட்டு உடல் பிரிகின்றதா?
நான் என்ற உணர்வு உடலோடும் மனத்தோடும் சிதைகின்றதா?
அல்லது உள்ளத்தோடும் உயிரோடும் நிலைக்கின்றதா?
இது சுடலை ஞானமல்ல. ஜோதியும், ஜயனியும், ரமணாவும் இது
போன்ற வேறு பல ஆத்மவிசாரணைகளை மூவரும் ஒலே கட்டிலில்
படுத்த வண்ணம் அலசி உரையாடி மகிழ்ந்து சயனிப்பார்கள்
தினசரி. அழகான குடும்பம், ஆழமான ஆத்மிகம், அர்த்தமுள்ள
வாழ்க்கை, ஆனந்தமான பயணங்கள். பயணத்தின் இடையில் ஒரு
பயணி பிரியுமிடத்துச் சந்தி இது பயணி ஜயனி
அவர் அமைதியும் அடக்கமும் அனைவரையும் வெகுவாக
வசீகரிக்கும் அவர் உபசரிப்பும் கரிசனையும் எல்லோர்
உள்ளத்தையும் கவரும் அவர் தன உலக வாழ்க்கையை
முடித்தாலும் எம் நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.
அன்னாருக்கு எமது உள்ளத்தாலும் உணர்வாலும் அஞ்சலி
செலுத்துவோமாக.

ச.பாலச்சந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

சாகும் வாழ்விது சத்தியமா? என்றும்
சாகாவாழ்வது சாத்தியமா? - வேகும்
உடல்வெந்தழிந்தாலும் என்றும்
வேகா உன் உரு வென்றுவிடும்

தான் தான் என்பான் தனித்தான் - தான்
இல்லாதான் எல்லாந் தான்
ஏன் ஏன் என்பான் எதைத்தான் - ஏனின்
விடையாய் எடுத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered Charity
No 292085

சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
Saiva Munnetta Sangam (UK)
"Community Service Through Hindu Concern"
2 Salisbury Road, Manor Park, London E12 6AB
Tel/fax: 0208 514 4732 Fax: 01268 561805

மண்ணுலகைத் துறந்து இறைவனடியில்
ஆனந்தத் துயில் புரியும்

தாயின்
மடியில்
25.11.1957



இறைவன்
அடியில்
12.07.2012

திருகோணமலையைப்
பிறப்பிடமாகவும் இலண்டனை வதிவிடமாகவும்
கொண்டிருந்து சிவபதமடைந்த

**திருமதி ஜெயராணி அருள்ஜோதிசந்திரன்**

அவர்களுக்கு எங்கள் சங்கத்தின் அஞ்சலிகள். அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும், உறவினர்கள் பிரிவுத்துயரிலிருந்து மீளவும் நாம் இறைவைனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணக் கோலத்தில் எனைக் கண்டு மனம் மகிழ்ந்த என் அன்னை



உறவினர் வீட்டில் உல்லாசமாக உடனிருந்த என் அன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்


அன்னையை மனைவியை இழந்துநின்ற
எங்களை உங்களின் நினைவில் கொண்டு
அன்பையும் இரங்கலும் அள்ளித்தந்து
அனைவரின் கரங்களும் உதவ வந்து
என்னையும் உங்களின் ஒரு மகனாய்
எண்ணிய உள்ளங்கள் அனைவருக்கும் - தாய்
மண்ணையும் மதித்து நாமிங்கு வந்து
பண்ணிய கருமத்தில் பங்கு கொண்டு
பண்பையும் பரிவையும் பகிர்ந்து நின்ற
உறவினர் நண்பர்கள் அனைவருக்கும்
தந்தையின் சார்பினில் நன்றி சொல்லி - தாய்
மண்ணையும் வாழ்த்தி நான் வணங்குகின்றேன்.

- மகன் ரமணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Rest In Peace



எட்ட வேண்டிய உயரத்தை எண்ண வைத்த அன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed by: SS Digital Printers - 0262224933

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org